கிழக்குப் பல்கலைக்கழகம், இலங்கை
கலை கலாசார பீடம்
மூன்றாம் வருட முதலாம் அரையாண்டு
சிறப்புக் கலைமாணித்தேர்வு 2011/2012

## **SOCS – 3104** சூழல் மற்றும் சட்டம் பற்றிய சமூகவியல்
## **( Sociology of Environment & Law )**

நேரம்: 03 மணித்தியாலங்கள்

பகுதி 1 இல் இருந்து மூன்று வினாக்களுக்கும் பகுதி 11 இல் இருந்து ஒரு வினாவிற்கும் மொத்தமாக நான்கு வினாக்களுக்கு விடை தருக.

---

### பகுதி 1

1) அ) சூழல் எனும் எண்ணக்கருவை வரையறுத்து, சூழலின் வகைப்பாடுகளை உதாரணங்களோடு பகுத்துரைக்குக.

10 புள்ளிகள்

ஆ) சுற்றுப்புறச் சூழலைப் பாதுகாப்பதில் சமூக நிறுவனங்கள் எவ்வகையில் பங்காற்றலாம் என்பதை விபரிக்குக.

15 புள்ளிகள்

2) அ) சனத்தொகை வளர்ச்சிக்கும் சுற்றுப்புறச்சூழல் சார்ந்த பிரச்சினைகளுக்குமான தொடர்புகளை எடுத்துரைக்குக.

10 புள்ளிகள்

ஆ) உணவுப் பாதுகாப்பு ( Food Security) என்பதை விளக்கி இலங்கையில் உணவுப்பாதுகாப்பு நடைமுறைகளை மதிப்பிடுக.

15 புள்ளிகள்

3) அ) "சூழல் சார் பெண்நிலைவாதம்" ( Eco – Feminism) சுருக்கமாக விபரிக்குக.

10 புள்ளிகள்

ஆ) பூகோள வெப்பமயமாதல் (Global Warming) பற்றி விளக்கி இப்பிரச்சினையைத் தடுக்கும் வழிவகைகளையும் சுருக்கமாகப் பிரேரிக்குக.

15 புள்ளிகள்

4) அ) சுற்றுப்புறச் சூழல் பற்றிய தொல்சீர் சமூகவியலாளர்களின் சிந்தனைகளை முன்வைக்குக.

10 புள்ளிகள்

ஆ) சூழலின் இருப்பு, அதன் சமூக முக்கியத்துவம் தொடர்பில் விமர்சனவியல் கோட்பாட்டாளர்களின் கருத்துக்களைச் சுருக்கமாகத் தெளிவு படுத்துக.

15 புள்ளிகள்

## பகுதி II

5) உலகளாவிய நிலையில் தீவிரம் பெற்று வரும் சூழல் சார்ந்த பிரச்சினைகளைப் பட்டியல் இட்டு, அவற்றுள் ஒரு பிரச்சினை சார்ந்த உருவாக்கம், அதன் சமூக, பொருளாதார, பண்பாட்டு விளைபேறுகள், நிவர்த்திப்பதற்கான வழிவகைகளையும் விரிவாக ஆராய்ந்து முன்வைக்குக.

25 புள்ளிகள்

6) இயற்கைச் சுற்றாடலின் நிலைத்திருப்பிலும் போஷிப்பிலும், பாதுகாப்பிலும் பெண் மேற்கொள்ளும் வகிபாகம் கணிசமானது பெண்களுக்கும் சுற்றாடலுக்குமான உயிர்ப்பு மிக்க பிணைப்பினை இட்டுச் சூழலியலாளரான கலாநிதி வந்தனா சிவா தெரிவிக்கும் சிந்தனைகளைத் தொகுத்துரைத்து, அவை பற்றிய உமது எதிர்வினைகளையும் விரித்துரைக்குக.

25 புள்ளிகள்